**செய்தி வெளியீடு எண்: 525** **நாள்:11.11.2016**

**<u>செய்தி வெளியீடு</u>**

# <u>பொருள் வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம்</u>

தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறு மற்றும் குறு தொழில் சங்கம் (TANSTIA), அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்துடன் (National Institute of Design) வடிவமைப்பு கிளினிக் திட்டம் (Design Clinic Scheme) குறித்த ஒரு நாள் கலந்தாய்வை **08.11.2016** அன்று சென்னை கிண்டியில் உள்ள தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் நடத்தியது. பல தொழிற்சங்கங்களை சேர்ந்த உறுப்பினர்களும் மற்றும் பல பொறியியல் கல்லூரிகளின் வடிவமைப்பு துறைசார்ந்த வல்லுனர்களும் கலந்துக்கொண்டனர்.

இக்கலந்தாய்வுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு க. இராஜாராமன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார், தமிழ்நாடு சிறு மற்றும் குறு தொழில் சங்கத்தின் (TANSTIA) தலைவர் திரு சி. பாபு, துவக்க உரை நிகழ்த்தினார். பெங்களூர் தேசிய வடிவமைப்பு நிறுவனத்தைச் சார்ந்த திரு பிரதாப் மூர்த்தி இத்திட்டத்தின் நன்மைகள் மற்றும் பலன்கள் குறித்து விளக்கினார். இத்திட்டத்தின் தொழில் நுட்பம் குறித்து சென்னையை சார்ந்த தொழில்நுட்ப ஆலோசகர்கள் திரு ரமேஷ் மாணிக்கம் மற்றும் திரு ஷா அவர்களும் விளக்கினர்.

இத்திட்டத்தின் நோக்கமானது சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தாங்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு தற்போதைய நிலையிலிருந்து கூடுதல் விலையும், விற்பனையும் அடையும் வண்ணம் சிறந்த வடிவமைப்புக்கொடுத்து தயாரிக்க செய்து நல்ல லாபம் அடையச்செய்வதே ஆகும்.

இந்த திட்டத்தின் அணுகுமுறையானது தமிழகத்திலுள்ள சிறு–குறு தொழில் துறையில் உள்ளவர்களையும் மற்றும் வடிவமைப்பு வல்லுனர்களையம் ஒருங்கிணைத்து தற்போது தயாரிக்கப்படும் பொருட்கள் எவ்வாறு நுகர்வோர்களால் பயன்படுத்தபட்டு வருகிறது என்பதை ஆய்வு செய்து நுகர்வோர்கள் கருத்துக்களை மையமாக கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் வடிவமைப்பை மாற்றி அமைப்பதே ஆகும்.

இத்திட்டமானது தனி மற்றும் கூட்டாக செயல்படும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மாணவர்களும் அவர்கள் திட்டங்களுக்கு உதவி பெறலாம். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவை மதிப்பீட்டு சர்வே மற்றும் வடிவமைப்பு கிளினிக் பயிலரங்கத்திற்கு 75 விழுக்காடு நிதியுதவி வழங்கப்படுகிறது. மாணவர் செயல் திட்டங்களுக்கு 75 விழுக்காடு நிதியுதவி வழங்கப்படுகிறது.

தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் வடிவமைப்பு கிளினிக் திட்டம் குறித்து நவம்பர் மாத கடைசி வாரத்தில் மதுரை. திருச்சி, கோயமுத்தூர் மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகளில் பல கலந்தாய்வுகளை நடத்தவுள்ளது. இது குறித்து விவரம் அறிய விரும்பும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முணைவோரோ அல்லது சிறு, குறு மற்றும் நடுத்தர சங்கங்களோ மற்றும் கல்லூரிகளோ கீழ்க்கண்ட தொலைபேசி மற்றும் மின்அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்

| | |
|---|---|
| திரு ஆனந்தன்<br>துணை இயக்குநர்<br>தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்<br>கிண்டி, சென்னை–32 | கைபேசி எண்: 9840991716<br>044-22252081 / 82<br>மின் அஞ்சல் : ddcdp@editn.in |
| திட்டம் பற்றிய விரிவான தகவலுக்கு | www.nid.edu/www.designclinicsmsme.org |

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**